# மணநாள் வாழ்த்து!

## திருமிகு உ.ஷே. தாஹிர்பாஷா

## இணையருக்கு!

## நாள்:05-01-2025

தேமதுரத் தமிழ்போலே
 திகழ்ந்தசீர் அறிவினாலே
மாமதுரைத் தமிழைக் கூடி,
 மறுவிலா நட்பில் திளைந்தோம்!
சேமமுற பணியும் கண்டு,
 செம்மையாய் மனையும் கொண்டு,
தாமாக வளர்ந்த நட்பை
 தகைவுடன் காத்து நிறைந்தோம்!

ஆதிநாள் நட்பின் நிலையை
 அவ்வபோது நினைத்து மகிழ்வோம்!
பாதிநாள் சுற்றி வந்த
 பயணமாய் கழியும் பொதுழு!
சூதிலாய் அன்பைக் கூட்டஇன்று
 சுகமுடன் பெயரன் பெயர்த்தி!
தீதிலா அன்பின் நினைவில்
 திருமண வாழ்த்துதானே!

மனமெலாம் மகிழ்வு பொங்க,
 மடியினில் பெயரர் இருக்க,
கனமெல்லாம் கலைந்து உடலின்
 களைப்பெலாம் நீங்குமன்றோ?
நனியென இறையை வேண்டி,
 நகர்ந்திடும் நாள்கள் துன்பமின்றி,
பனிபோல் மறைதல் வேண்டும்!
 பாங்குடன் வாழ்த்தும் நண்பர்கள்;

**கு.ப. அசோகன் & மு. ஜெயசங்கர்.**